# திருக்குறள்

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

பிறபிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

- திருவள்ளுவர்

வாழ்த்து பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.

வாரம் - 11 பேசிப் பழகுவோம் எண் - 9

# வினாச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| WHAT | = | என்ன |
| WHY | = | ஏன் |
| WHERE | = | எங்கு |
| WHEN | = | எப்பொழுது |
| WHICH | = | எது |
| HOW | = | எப்படி |

மேலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்யவும்

வினாச் சொற்களைச் சிறிய தொடர்களை இணைத்துக் காட்டி உள்வாங்கச் செய்யவும்

நேரம் என்ன ? நிறம் என்ன ? உயரம் என்ன ?

# வினாப்பயிற்சியும் விடையளித்தலும்

## இப்பொழுது நேரம் என்ன ?

**இப்பொழுது நேரம் 10 மணி**

**இப்பொழுது நேரம் காலை 10 மணி**

## இது என்ன நிறம் ?

**இது நீல நிறம்.**

## இதன் நிறம் என்ன ? இதன் விலை என்ன ?

**இதன் நிறம் நீலம்.**

**இதன் விலை 10 ரூபாய் 50 காசுகள்**

## உன் உயரம் என்ன ?

**என் உயரம் 4 அடி 10 அங்குலம்.**

வினாக்களை மாணவர்கள் கேட்கவும், மாணவர்களே அதற்கான பதில் சொல்லவும், பயிற்றுவிக்கவும்.

**என்ன** என்ற வினாச் சொல்லை வீட்டிலும் வகுப்பறையிலும் பயன்படுத்த ஊக்குவிக்கவும்




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும்.
எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும்
என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை
என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை
எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

## வாரம் - 11

**மாணவர் செயற்பாடு எண் - 1**

**மாணவர் பெயர் ..................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ர் ர எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| ர் | ர | ர் | ர | ர் | ர |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 11

## மாணவர் செயற்பாடு எண் - 2

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

( கற்றுக்கொண்ட ர் ர எழுத்துகளை கீழே வட்டமிடவும் )

றா றெ றே றொ - எழுத்துகளில் உள்ள ர எழுத்தை வட்டமிட்டாலும் சரியே

நடந்தன நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை 'சிறுதுளி' அமைப்பு செய்திருந்தது.

'சிறுதுளி' அமைப்பு சார்பில், கோவையில் நடந்த 'நதிக்கரை நாகரிக கண்காட்சி' நேற்று நிறைவடைந்தது. இதில், ஆறுகளைப் பற்றி விளக்கும் வரைபடம்.

# 'அட்டைகளில் தமிழ் எழுத்துகள்' அறிமுகம்

## ...களில் எளிதாக தமிழ் படிக்கலாம்




பாள்ளாச்சி பேராசிரியர் நடேசன் கண்டுபிடித்துள்ள தமிழ் எழுத்து

எழுத்துகளை ஒலிக்கவும், எழுதவும் பயிற்றுவிக்கப்படும். ஒவ்வொரு நாளும் கற்ற எழுத்துகளை செய்தித்தாளில் வட்டமிட்டு மீள்பார்வை செய்யப்படும். தொடர்ந்து, கற்ற எழுத்துகளை இணைத்துப்படிக்க கற்றுத்தரப்படும். சொற்களை படித்து பொருள் உணர கற்றுத்தரப்படும். இந்த மூன்று கட்டங்களில் தரப்படும் பயிற்சி மூலம், முழுமையாக கல்வி அறிவு இல்லாத ஒருவர் இரண்டு மாதத்தில் தமிழ் படிக்க இயலும்.

முதல்கட்டமாக உயிர் மெய் எழுத்தும் அதன் மெய்யெழுத்தும் கற்றுத்தரப்படும். அடுத்தநாள் செய்தித்தாளில் அந்த எழுத்தை வட்டமிட்டு காட்ட வேண்டும். தொடர்ந்து வேறொரு உயிர்மெய் எழுத்து, அதன் மெய்யெழுத்து என படிப்படியாக அனைத்து எழுத்துகளும் அறிமுகப்படுத்தப்படும். அட்டையில், அந்த எழுத்துடன், படங்களும் அச்சிடப்பட்டிருக்கும்.

இரண்டாம் கட்டமாக, மெய்யெழுத்து முதலிலும், உயிர்மெய் எழுத்து இரண்டாவதுமாக கற்றுத்தரப்படும். அந்த எழுத்துகள் அடங்கிய வார்த்தைகள் முன்னுரிமை அடிப்படையில் கற்றுத்தரப்படும்.

மூன்றாம் கட்டமாக உயிரெழுத்துகள் கற்றுத்தரப்படும். இதில், 'ஈ' எழுத்தை அடுத்து 'உ' கற்றுத்தரப்படமாட்டாது. 'எ'கற்றுத்தரப்படும். இதனால், படிப்பவர்கள் குழம்பிப் போகமாட்டார்கள்.

தொடர்ந்து, உயிர் எழுத்துகளுடன், மெய்யெழுத்துகள் இணைந்து வரும் உயிர்மெய் எழுத்துகள் சிறிய வார்த்தைகளுடன் கற்றுத்தரப்படும். இம்முறையால், மூன்று வாரங்களில் பெரும்பாலான வார்த்தைகளை படிப்பவர்களால் முழுமையாக படிக்க முடியும்.

28வது நாளில் இருந்து உ, ஊ, அவ், எழுத்துகளும் அவற்றின் உயிர்மெய் எழுத்துகளும் கற்றுத்தரப்படும். இதன் மூலம் 31 அட்டைகளில் முழுமையாக தமிழ் வாக்கியங்களை முழுமையாக படிக்கும் அளவுக்கு, கற்பவர் தேறிவிடுவார். 32வது அட்டை கற்பிக்கும் ஆசிரியருக்கானது. மாணவனின் நிலை குறித்து இதில் கணக்கிடப்படும். இந்த திட்டம் குறித்து அறிந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், கோவை மாவட்டத்தில் கற்பதில் பின்தங்கிய12 சதவிகித மாணவர்களுக்கு இந்த அட்டைகளை பயன்படுத்தி கற்றுத்தர உத்தரவிட்டுள்ளார். இதனால், தேர்ச்சி விகிதம் 90 சதவிகிதத்தை தாண்டும். இவ்வாறு முதுநிலை விரிவுரையாளர் நடேசன் தெரிவித்தார்.

### மெட்ரிக் பள்ளிகளும் வரவேற்பு!

'இத்திட்டத்தால் மெட்ரிக் பள்ளிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளன. தங்கள் பள்ளியில் தமிழ் படிக்க தெரியாத மாணவர்களுக்கு இந்த அட்டைகளை பயன்படுத்தி கற்றுத்தர முன்வந்துள்ளன. ஆனால், முழுமையாக கற்க இயலாதவர் குறித்து தங்களுக்கு கணக்கெடுப்பு தர வேண்டும் என, அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளதால், மெட்ரிக் பள்ளிகள் தயக்கம் காட்டுகின்றன. தங்கள் பள்ளி மாணவர்களுக்கு படிக்க தெரியாது என்பதை அறிவிப்பதில் அவர்களுக்கு தயக்கம் உள்ளது. இருப்பினும், விரைவில் மெட்ரிக் பள்ளிகளும் இம்முறையை பின்பற்றும்' என, கல்வியாளர்கள் தெரிவித்தனர்.

# வாரம் - 11

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ...................................... **நிலை**........... **நாள்**...............

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

## நினைவூட்டல் -

**சக் மக் சக மக தட மத கத் பத் பத**

**நக பந் நட நத நத் சந கந**

**வச வட வத மத தட தவ பத**

**ய்ய கய கய் பய பய் மய மய்**

**ர்ர பர தர நர கர வர சர டர்**


10

கரம் தரம்

மரம் தகரம்

கரகம் சவரம்

தச்சர்

சக்கரம்

பம்பரம்

# வாரம் - 11

## வீட்டு வேலை எண் - 1

மாணவர் பெயர் ........................................ நிலை........... நாள்................

## த த் , ந ந் , வ வ், ய் ய, ர ர்

( பத்து எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)

நடந்தன நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை 'சிறுதுளி' அமைப்பு செய்திருந்தது.

'சிறுதுளி' அமைப்பு சார்பில், கோவையில் நடந்த 'நதிக்கரை நாகரிக கண்காட்சி' நேற்று நிறைவடைந்தது. இதில், ஆறுகளைப் பற்றி விளக்கும் வரைபடம்.

# 'அட்டைகளில் தமிழ் எழுத்துகள்' அறிமுகம்

## ளில் எளிதாக தமிழ் படிக்கலாம்




பாள்ளாச்சி பேராசிரியர் நடேசன் கண்டுபிடித்துள்ள தமிழ் எழுத்து

### மெட்ரிக் பள்ளிகளும் வரவேற்பு!

'இத்திட்டத்தால் மெட்ரிக் பள்ளிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளன. தங்கள் பள்ளியில் தமிழ் படிக்க தெரியாத மாணவர்களுக்கு இந்த அட்டைகளை பயன்படுத்தி கற்றுத்தர முன்வந்துள்ளன. ஆனால், முழுமையாக கற்க இயலாதவர் குறித்து தங்களுக்கு கணக்கெடுப்பு தர வேண்டும் என, அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளதால், மெட்ரிக் பள்ளிகள் தயக்கம் காட்டுகின்றன. தங்கள் பள்ளி மாணவர்களுக்கு படிக்க தெரியாது என்பதை அறிவிப்பதில் அவர்களுக்கு தயக்கம் உள்ளது. இருப்பினும், விரைவில் மெட்ரிக் பள்ளிகளும் இம்முறையை பின்பற்றும்' என, கல்வியாளர்கள் தெரிவித்தனர்.

எழுத்துகளை ஒலிக்கவும், எழுதவும் பயிற்றுவிக்கப்படும். ஒவ்வொரு நாளும் கற்ற எழுத்துகளை செய்தித்தாளில் வட்டமிட்டு மீள்பார்வை செய்யப்படும். தொடர்ந்து, கற்ற எழுத்துகளை இணைத்துப்படிக்க கற்றுத்தரப்படும். சொற்களை படித்து பொருள் உணர கற்றுத்தரப்படும். இந்த மூன்று கட்டங்களில் தரப்படும் பயிற்சி மூலம், முழுமையாக கல்வி அறிவு இல்லாத ஒருவர் இரண்டு மாதத்தில் தமிழ் படிக்க இயலும்.

முதல்கட்டமாக உயிர் மெய் எழுத்தும் அதன் மெய்யெழுத்தும் கற்றுத்தரப்படும். அடுத்தநாள் செய்தித்தாளில் அந்த எழுத்தை வட்டமிட்டு காட்ட வேண்டும். தொடர்ந்து வேறொரு உயிர்மெய் எழுத்து, அதன் மெய்யெழுத்து என படிப்படியாக அனைத்து எழுத்துகளும் அறிமுகப்படுத்தப்படும். அட்டையில், அந்த எழுத்துடன், படங்களும் அச்சிடப்பட்டிருக்கும்.

இரண்டாம் கட்டமாக, மெய்யெழுத்து முதலிலும், உயிர்மெய் எழுத்து இரண்டாவதுமாக கற்றுத்தரப்படும். அந்த எழுத்துகள் அடங்கிய வார்த்தைகள் முன்னுரிமை அடிப்படையில் கற்றுத்தரப்படும்.

மூன்றாம் கட்டமாக உயிரெழுத்துகள் கற்றுத்தரப்படும். இதில், 'ஈ' எழுத்தை அடுத்து 'உ' கற்றுத்தரப்படமாட்டாது. 'எ'கற்றுத்தரப்படும். இதனால், படிப்பவர்கள் குழம்பிப் போகமாட்டார்கள்.

தொடர்ந்து, உயிர் எழுத்துகளுடன், மெய்யெழுத்துகள் இணைந்து வரும் உயிர்மெய் எழுத்துகள் சிறிய வார்த்தைகளுடன் கற்றுத்தரப்படும். இம்முறையால், மூன்று வாரங்களில் பெரும்பாலான வார்த்தைகளை படிப்பவர்களால் முழுமையாக படிக்க முடியும்.

28வது நாளில் இருந்து உ, ஊ, அவ், எழுத்துகளும் அவற்றின் உயிர்மெய் எழுத்துகளும் கற்றுத்தரப்படும். இதன் மூலம் 31 அட்டைகளில் முழுமையாக தமிழ் வாக்கியங்களை முழுமையாக படிக்கும் அளவுக்கு, கற்பவர் தேறிவிடுவார். 32வது அட்டை கற்பிக்கும் ஆசிரியருக்கானது. மாணவனின் நிலை குறித்து இதில் கணக்கிடப்படும். இந்த திட்டம் குறித்து அறிந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், கோவை மாவட்டத்தில் கற்பதில் பின்தங்கிய12 சதவிகித மாணவர்களுக்கு இந்த அட்டைகளை பயன்படுத்தி கற்றுத்தர உத்தரவிட்டுள்ளார். இதனால், தேர்ச்சி விகிதம் 90 சதவிகிதத்தை தாண்டும். இவ்வாறு முதுநிலை விரிவுரையாளர் நடேசன் தெரிவித்தார்.

# வாரம் - 11

## வீட்டு வேலை எண் - 2

**மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )
(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ<br>வ் | ய<br>ய் | ர் | ர | ர் | ர |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |